தலைப்பு 230 - சட்டவரைஞர் திணைக்களம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

தலைப்பு 230 - சட்டவரைஞர் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் சட்டவரைஞர் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2023 மே மாதம் 30 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 ஆகஸ்ட் 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

சட்டவரைஞர் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் சட்ட வரைஞர் திணைக்களத்தினதும், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை சட்ட வரைஞர் திணைக்களத்தினதும், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின்/கணக்கீட்டு உத்தியோகத்தரின் (பொருத்தமான வகையில்) பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சு/திணைக்களம்/மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே

விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

2. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திருந்தன.

(ஆ) கடந்த வருடத்தின் நிதிக்கூற்றுகள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தியிருக்கவில்லை.

கடந்த வருடத்திற்குரிய அறிக்கையின் பந்திக்கான தொடர்பு	**நடைமுறைப்படுத்தப்படாத பரிந்துரைகள்**	**இந்த அறிக்கையின் பந்திக்கான தொடர்பு**
• 2.4 (ii)	வாகனங்கள் தொடர்பில் எரிபொருள் எரிப்பு பற்றிய பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை	3.2 (ஆ)

3. நிதி மீளாய்வு

3.1 செலவின முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
போதுமான அளவு வருடாந்த மதிப்பீட்டில் ஏற்பாடுகள் ஒதுக்கப்படாமையால், 03 மீண்டுவரும் செலவின விடயங்கள் மற்றும் ஒரு மூலதனச் செலவின	வருட இறுதியில் மேலதிக நேர வேலை செய்வதற்கான தேவைப்பாடு குறைவாக எழுந்தமையால், உண்மையான ஊக்குவிப்புக் கொடுப்பனவு செலுத்துகை குறைந்ததன்	தேவைப்பாடு-களைக் கண்டறிந்து மதிப்பீடுகள் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

விடயம் ஆகியவற்றுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா. 57,860,000 இன் தேறிய ஏற்பாடுகளில் ரூபா. 12,849,279 மீதமிருந்தன. இந்த மிகுதியானது 15 சதவீதம் முதல் 81 சதவீதம் வரையிலான வீச்சைக் கொண்டிருந்தது.

விளைவாக ஏனைய கொடுப்பனவுகளுக்கான செலவுகள் குறைவடைந்தமையும், தேசிய வரவு செலவுத் திட்டச் சுற்றறிக்கை 01/2024 இன் 6.1/6.2 ஆம் பந்திகளின் பிரகாரம் செயற்பட்டமையால் வெளிநாட்டுப் பயணச் செலவுகள் குறைவடைந்தமையும், 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளைத் தயாரிக்கும்போது திணைக்களத்தின் சேவையக முறைமையின் Fire wall முறைமை செயலிழந்திருந்தமையால், அந்த முறைமையை இலங்கை றெலிகொம் நிறுவனத்திடம் இருந்து கொள்வனவு செய்வதற்கு பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டிருந்த போதிலும், 2024 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்வதற்கு வாய்ப்புக் கிடைக்காமையால் மென்பொருள் பேணற் செலவுகள் மீதமிருந்தமையும், உத்தியோகத்தர்கள் வெளிநாட்டுப் பயிற்சிகளைக் கட்டுப்படுத்தியமையினாலும், அந்த ஏற்பாடுகள் மீதமிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

3.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு	அவதானிப்பு பெறுமதி ரூபா	இணங்காமை	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்**				
	(i) நி.பி 156(5)	1,446,417	ஏதேனும் ஒரு பிழையைத் திருத்த வேண்டிய சந்தர்ப்பத்தில், அப் பிழையானது மாற்றப்பட வேண்டிய அல்லது நீக்கப்பட வேண்டிய சொற்கள், இலக்கங்கள் போன்றவற்றை ஒற்றைக் கோட்டினால் வெட்டிவிட்டு, தேவையான இடங்களில் அத்தகைய மாற்றங்களுக்கு மேலே சரியான இலக்கங்கள் போன்றவற்றைச் சிவப்பு மையினால் எழுதுவதன் மூலம் திருத்தப்படுதல் வேண்டும். அத்தகைய திருத்தங்களுக்குப் பொறுப்பான அலுவலர் தனது குறுங் கையொப்பத்தை இட்டு, அத்தோடு தொடர்புடைய மாற்றம் மற்றும் நீக்கத்தினை உறுதிப்படுத்தவில்லை. .	வவுச்சர்களில் உள்ள குறைபாடுகளைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், ஏதேனும் பிழை ஏற்பட்டால் திருத்தம் செய்வதற்கான நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டியதன் அவசியம் குறித்து, வவுச்சர்களைத் தயாரிக்கும் மற்றும் பரிசோதிக்கும் அலுவலர்களுக்கு அறியப்படுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.	நிதிப் பிரமாணங்களின் பிரகாரம், அத்தோடு தொடர்புடைய மாற்றம் மற்றும் நீக்கத்திற்குப் பொறுப்பான அலுவலர் உறுதி செய்தல் வேண்டும்.

(ii) 237(ஆ)	13,900	களஞ்சிய வழங்கல்களுக்காகப் பணம் செலுத்தும் போது, பொருட்கள் கிடைக்கப் பெற்றுள்ளன என்பதற்கும், அத்துடன் தொடர்புடைய பொருட்களின் பதிவேடு, களஞ்சியப் புத்தகம் போன்றவற்றுள் அப் பொருட்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்பதற்கும் உறுதிப்படுத்தலை இணைக்க வேண்டியிருந்தபோதிலும், 02 கொள்வனவுகளுக்கு அமைய அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	ரூபா. 13,900 பெறுமதியான இரண்டு வவுச்சர்களுக்கு அமைய கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களுடன் தொடர்பான குறிப்புக்கள் களஞ்சியப் புத்தகத்திலும் களஞ்சியப் பொருட்கள் வழங்குதலுக்கான பதிவேட்டிலும் குறிப்பிடப்பட்டுள்ள. தவறுதலாக வவுச்சரில் குறிப்பிட முடியாமல் போனதுடன், தற்போது அந்தக் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.	களஞ்சிய வழங்கல்களுக்காகப் பணம் செலுத்தும் போது, பொருட்கள் கிடைக்கப் பெற்றுள்ளன என்பதற்கும், அத்துடன் தொடர்புடைய பொருட்களின் பதிவேடு, களஞ்சியப் புத்தகம் போன்றவற்றுள் அப் பொருட்கள் உள்ளடக்கப் பட்டுள்ளன என்பதற்கும் உறுதிப்படுத்தலை இணைக்க வேண்டும்.
(iii) நி.ஒ. 1646	-	பயணங்கள் தொடர்பான மாதாந்தச் சுருக்கத்தை, வாகனப் பொறுப்புள்ள அலுவலரால் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் மாதத்திற்கு அடுத்த மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர், 268(அ) பொதுப் படிவத்தில் எழுதப்பட்ட பயணங்கள் தொடர்பான மாதாந்தச் சுருக்கத்தின் மூலப் பிரதியுடன், அந்தந்த மாதத்திற்கான தினசரி ஓட்டப் பதிவுகளையும் தமது திணைக்களத் தலைவர் ஊடாகக் கணக்காய்வு அதிபதிக்கும் அனுப்பப்பட	வாகனங்களின் மாதாந்தச் சுருக்கங்களை உடனடியாகக் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.	தினசரி ஓட்டப் பதிவுகள் நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் கணக்காய்வு அதிபதியிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

	வேண்டியிருந்தபோதிலும், 11 வாகனங்கள் தொடர்பில் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.		
(ஆ) அரச நிர்வாகச் சுற்றறிக்கை			
2016 திசெம்பர் - 29ஆம் திகதியிடப்பட்ட இல. 30/2016 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி	ஒவ்வொரு எரிபொருள் பரிசோதனைக்குப் பின்னரும், 12 மாத காலப்பகுதிக்குப் பின்னரோ 25,000 கிலோமீட்டர் தூரப் பயணத்தின் பின்னரோ அல்லது இயந்திரத்துடன் தொடர்பான பிரதான திருத்தப் பணிகளுக்குப் பின்னரோ, இந்த விடயங்களில் முதலாவதாக வரும் சந்தர்ப்பத்தின் பின்னர் மீண்டும் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தபோதிலும், நிறுவனத்தின் 03 வாகனங்களுக்காக எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	ஒதுக்கத்தின் வாகனங்களுக்காக எரிபொருள் பரிசோதனையை உடனடியாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.	திருத்தப் பணிகளுக்குப் பின்னரோ, இந்தக் விடயங்களில் முதலாவதாக வரும் சந்தர்ப்பத்தின் பின்னர் மீண்டும் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்படுதல் வேண்டும்

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

கணக்காய்வு அவதானிப்பு	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
திணைக்களத்தினால் 2024 திசெம்பர் 31 ஆம் திகதியிடப்பட்ட செயற்றிறன் அறிக்கையின்படி, 2024 சனவரி 01 ஆம் திகதிக்கு வரைவு செய்யப்பட்டு, சட்டமா அதிபர் அல்லது ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிடமிருந்து	2024 சனவரி 01 ஆம் திகதிக்கு வரைவு செய்யப்பட்டு, சட்டமா அதிபர் அல்லது ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிடமிருந்து அவதானிப்புகள் மற்றும் ஆலோசனைகளை எதிர்பார்த்து முதன்மை அல்லது இறுதி வரைவுகளாக சமர்ப்பிக்கப்பட்டு	திணைக்களத்தின் செயற்றிறனை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்..

அவதானிப்புகள் மற்றும் ஆலோசனைகளை எதிர்பார்த்து முதன்மை அல்லது இறுதி வரைவுகளாக சமர்ப்பிக்கப்பட்டு எஞ்சியிருந்த 289 கோரிக்கைகளும், அத்துடன் 2024 சனவரி 01 ஆம் திகதிக்கு வரைவு செய்தல் நிறைவடையாத 96 கோரிக்கைகளும் அடங்கிய மொத்தமுள்ள 385 கோரிக்கைகளில், நீண்டகாலமாக ஆலோசனைகள் இன்றி மூடப்பட்ட கோவைகள் 95 ஆக இருந்ததுடன், 2024 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு வரைபு செய்தல் நிறைவடையாத 45 கோரிக்கைகள் மீதமாக இருந்தன.

எஞ்சியிருந்த கோரிக்கைகளின் எண்ணிக்கை 289 ஆகும். அத்துடன், 2024.01.01 ஆம் திகதிக்கு வரைபு செய்தல் நிறைவடையாத கோரிக்கைகளின் எண்ணிக்கை 96 ஆகும். 2024.01.01 ஆம் திகதி முதல் 2024.12.31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் பங்குதாரர்களிடமிருந்து புதிய கோரிக்கைகளின் எண்ணிக்கை 244 உம், கடந்த வருடங்களிலும் இந்த வருடத்திலும் மும்மொழிகளிலும் வரைவு செய்யப்பட்டு நிறைவு செய்யப்பட்டு, மீண்டும் திருத்தங்களை மேற்கொள்வதற்காக 2024.12.31 ஆம் திகதி வரையில் 19 கோரிக்கைகளின் எண்ணிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அந்த மொத்தமுள்ள 648 கோரிக்கைகளில், நீண்டகாலமாக ஆலோசனைகள் இன்றி மற்றும் அமைச்சுக்களின் ஆலோசனைகள் அல்லது அமைச்சரவைத் தீர்மானங்களின் அடிப்படையில் 95 கோவைகள் மூடப்பட்டுள்ளதுடன், 2024.12.31 ஆம் திகதிக்கு வரைவுகள் தயாரிக்கப்பட்டு மும்மொழிகளிலும் தொடர்புடைய பங்குதாரர்களுக்கு வழங்கப்பட்ட எண்ணிக்கை 192 ஆகும். மேலும், 2024.12.31 ஆம் திகதிக்கு வரைவு செய்யப்பட்டு, சட்டமா அதிபர் அல்லது ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிடமிருந்து அவதானிப்புகள் மற்றும் ஆலோசனைகளை எதிர்பார்த்து முதன்மை அல்லது இறுதி வரைவுகளாக சமர்ப்பிக்கப்பட்டு எஞ்சியிருந்த கோரிக்கைகள் 316 உம், வரைபு செய்தல் நிறைவடையாத கோரிக்கைகளின் எண்ணிக்கை 45 உம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது

4.2 வருடாந்த செயற்றிறன் அறிக்கை

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதியிடப்பட்ட அரச நிதிச் சுற்றறிக்கை இல. 02/2020 இன் 12.2 ஆம் பந்தியின் பிரகாரம், வருடாந்த செயற்றிறன் அறிக்கையைத் தயாரிக்க வேண்டியிருந்தபோதிலும், இந்தத் திணைக்களத்தினால் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட செயற்றிறன் அறிக்கையில், நிறுவனப் பின்னணி / நடைமுறைப்படுத்தல் சுருக்கம், முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு, நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைவதற்கான செயற்றிறன், மனித வளப் பின்னணி ஆகிய அத்தியாயங்கள் உள்ளடக்கப்படவில்லை	வருடாந்த செயற்றிறன் அறிக்கையில் உள்ளடக்கப்படும் வருடாந்த நிதியியல் அறிக்கைகளைக் கணக்காய்வுக்குச் சமர்ப்பித்து அனுமதி பெற்றுக்கொண்டதன் பின்னர், அரச நிதிச் சுற்றறிக்கை இல. 02/2020 இன் 12.2 ஆம் பந்தியின் பிரகாரம் ஏனைய அத்தியாயங்களை உள்ளடக்கி செயற்றிறன் அறிக்கையைத் தயாரிப்பது இதற்கு முன்னர் பின்பற்றப்பட்ட பொதுவான நடைமுறையாகும். அதற்கமைய, நிதியியல் அறிக்கைகளை மாத்திரம் அனுமதியளிப்பதற்காகச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. வருடாந்த செயற்றிறன் அறிக்கையைச் சுற்றறிக்கையின் பிரகாரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன	சுற்றறிக்கையின் பிரகாரம் அத்தியாயங்கள் உள்ளடக்கப்பட வேண்டும்..

5. நல்லாளுகை

5.1 உள்ளக கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு அதிகாரியின் கருத்துரை	பரிந்துரை
2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம், திணைக்களத்தினுள் உள்ளக கணக்காய்வுப் பிரிவொன்றை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன், உள்ளகக் கணக்காய்வாளர் பதவியொன்றும் அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை.	இந்தத் திணைக்களத்துக்கென தனியாக உள்ளக கணக்காய்வுப் பிரிவொன்று நிறுவப்படவில்லை. நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் கீழ் உள்ள உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு கணக்காய்வு வினவல்கள் வழங்கப்படுகின்றன. அமைச்சின் பிரதான உள்ளக கணக்காய்வாளரால்	தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

		காலாண்டுக்கான கணக்காய்வு முகாமைத்துவக் குழு கூட்டங்கள் நடாத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.	

6. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணி 154 ஆகவும், உண்மையான ஆளணி 92 ஆகவும் இருந்தமையால், வெற்றிட ஆளணி 62 ஆகக் காணப்பட்டது. அதற்கமைய, அனுமதிக்கப்பட்ட ஆளணியில் 40 சதவீதம் வெற்றிடங்கள் காணப்பட்டன.	தொடர்புடைய வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.	வெற்றிடங்கள் காணப்படுவது செயற்றிறனில் தாக்கம் செலுத்துவதால், வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.
(ஆ)	சிரேஷ்ட உதவி சட்ட வரைஞர் பதவி வெற்றிடங்கள் 12 உம், பணிப்பாளர் (நிர்வாகம்) பதவி, நூலகர் பதவி, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் பதவி ஆகிய பதவிகள் 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரை வெற்றிடமாகக் காணப்பட்டன.	தொடர்புடைய வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது..	வெற்றிடங்கள் காணப்படுவது செயற்றிறனில் தாக்கம் செலுத்துவதால், வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.
(இ)	தொகுப்பாளர் பதவிக்கு 07 வெற்றிடங்களும், ஆவணப்படுத்தல் உதவியாளர் பதவிக்கு 11 வெற்றிடங்களும், பிரதான மொழிபெயர்ப்பாளர் பதவிக்கு 01 வெற்றிடமும், அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு 01 வெற்றிடமும், மொழிபெயர்ப்பாளர் பதவிக்கு 08 வெற்றிடங்களும், சாரதி பதவிக்கு 03 வெற்றிடங்களும், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் பதவிக்கு 04 வெற்றிடங்களும் என திணைக்களத்திற்கு அத்தியாவசியமான 35 பதவிகளின் எண்ணிக்கையில் வெற்றிடங்கள் காணப்பட்டன.	தொடர்புடைய வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.	வெற்றிடங்கள் காணப்படுவது செயற்றிறனில் தாக்கம் செலுத்துவதால், வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.